**D.V.C.No.**8/2020 **Date**- 12.07.2022

ம.சா.3 – முத்தையா, த.பெ.முத்து

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணத்தின்பேரில் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை சாட்சி சத்தியபிரமாணம் செய்துவைக்கப்பட்டார்.**

நான் என்ன வேலை செய்து வருகிறேன் என்றால் நான் விவசாய வேலை செய்து வருகிறேன், வாகனம் சொந்தமாக வைத்து ஓட்டுகிறேன். மேற்படி வாகனம் எனது பெயரில் உள்ளது. மேற்படி வாகனத்தின் பதிவு எண். டிஎன் 65 AQ 4074. மனுதாரர் எனது மூத்த சகோதரி என்றால் சரிதான். மேற்படி வாகனம் மனுதாரர் பெயரில் இருந்தது என்றால் சரியல்ல. மனுதாரர் தற்போது என்னுடன் வசித்து வருகிறார் என்றால் இல்லை தனியாக வசித்து வருகிறார்.

மனுதாரருக்கு திருமணத்தின்போது 20 பவுன் தங்க நகைகள் மற்றும் திருமணத்திற்கான செலவுகள் ரூபாய் 3 இலட்சம் ஆகியவற்றிற்கு ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் திருமணத்தின்போது எடுக்கப்பட்ட புகைப்படத்தை தாக்கல் செய்துள்ளேன். மனுதாரரும், எதிர்மனுதாரர்களும் கூட்டுக்குடும்பமாக வசிக்கவில்லை என்றால் சரிதான், 1ம் மனுதாரரும், எதிர்மனுதாரரும் தனியாக வசித்தனர்.

1ம் மனுதாரரின் நகைகளை 1ம் எதிர்மனுதாரர் அடகு வைத்தற்கான ஆவணங்கள் எதையாவது தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை. எதிர்மனுதாரர்கள் 1ம் மனுதாரரை கொடுமை செய்தது நேரடியாக பார்க்கவில்லை என்றால் சிலநேரம் நேரடியாக பார்த்துள்ளேன் ஒருமுறை விருந்து போன சமயத்தில் 1ம் எதிர்மனுதாரரின் அண்ணன் மனைவி மற்றும் அவரது சகோதரிகள் நீ என்ன நகை போட்டுவந்தாய் என்றும் என் தம்பிக்கு ஏற்ற மனைவி நீ கிடையாது என்றும் தரக்குறைவாக 1ம் மனுதாரரிடம் பேசியதை நான் பார்த்தேன்.

நான் சொல்வதுபோல் எதிர்மனுதாரர்கள் தரக்குறைவாக பேசியிருந்தால் நிரூபண வாக்குமூலத்தில் சொல்லியிருப்பேன் என்றால்

சரியல்ல. 1ம் மனுதாரர் 1ம் எதிர்மனுதாரருடன் சேர்ந்து வாழக்கோரி மாண்புமிகு தேவகோட்டை சார்வு நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். மேற்படி மனுவிற்கு தாக்கல் செய்த எதிருரையில் 1ம் எதிர்மனுதாரர் சேர்ந்து வாழ்வதாக கூறியுள்ளார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது.

1ம் எதிர்மனுதாரர் 1ம் மனுதாரருடன் சேர்ந்துவாழ நான் தான் தடையாக உள்ளேன் என்றால் நான் தடையாக இல்லை. நான் பயன்படுத்திவரும் வாகனம் 1ம் மனுதாரருக்கு சொந்தம் என்றால் சரியல்ல. நான் நிரூபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளதுபோல் எதிர்மனுதாரர்கள் 1ம் மனுதாரரின் தொந்தரவு செய்யவில்லை என்றால் சரியல்ல. எனக்கு தெரியாமல் தான் 1ம் மனுதாரர் 1ம் எதிர்மனுதாரருடன் சேர்ந்து வாழ மனு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

குற்றவியல் நடுவர்,
தேவகோட்டை.